செ. கு. எண்: 90 நாள்: 14.06.2018

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் முதியோருக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினச் செய்தி

முதுமை என்பது தவிர்க்க இயலாதது. காலத்தின் நெடிய பாதையில் நாம் அனைவரும் ஒவ்வொரு நொடியும் முதுமையின் திசையை நோக்கியே நகர்ந்து கொண்டு இருக்கின்றோம். முதுமையை மதித்தலே ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளம். நம்மை சுமந்தவர்களை நாம் சுமப்பது என்பது நமது கடமையாகும். முதுமை என்பது இன்னொரு குழந்தை பருவம். முதியோர் நம்மிடம் எதிர்பார்ப்பது உண்மையான அன்பையும் பாசத்தையும் மட்டுமே. வாழ்க்கையின் மேடு பள்ளங்களை கடந்து களைத்த பாதங்களை தழுவுதல் இளையவர்களின் தலையாய கடமையாகும்.

முதியோர் நலன் மீது மிகுந்த அக்கறையும், பாசமும் கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு அவர்களுக்கென பல்வேறு சிறப்பு நல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றுள் குறிப்பாக,

- தமிழ்நாட்டில் சுமார் 15.50 லட்சம் ஆதரவற்ற முதியோருக்கு மாதந்தோறும் முதியோர் ஓய்வூதியமாக ரூபாய் 1000/– ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

- மாண்புமிகு அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மூத்த குடிமக்களுக்கான இலவச அரசுப் பேருந்து பயணச் சலுகை திட்டம் (Free Bus pass) மூலம் சென்னையில் 3.12 லட்சம் மூத்த குடிமக்கள் பயனடைந்துள்ளனர்.

- மாண்புமிகு அம்மா அவர்களால், அரசு முதியோர் இல்லங்களில் உள்ள முதியோருக்கு வழங்கப்படும் உணவு மானியம், 300 ரூபாயிலிருந்து 1200 ரூபாயாக உயர்த்தப்பட்டு, 2016ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

- இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு உதவி பெறும் முதியோர் இல்லங்களில் வசிக்கும் முதியோருக்கு, நிமோனியா நோய்க்கு எதிரான தடுப்பூசி மருந்து அளிக்கும் திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு அரசு 1.65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சபை ஒவ்வொரு ஆண்டும் ஜுன்–15ஆம் தேதியை முதியோருக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினமாக அனுசரித்து வருகிறது. அதனைத் தொடர்ந்து

தமிழ்நாடு அரசும் இவ்வாண்டு முதல், ஜுன் 15ஆம் தேதியை முதியோருக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினமாக அனுசரிக்க உள்ளது. இதற்காக துண்டு பிரசுரங்கள் அச்சடித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளி, கல்லூரி அரசு அலுவலகங்களில் உறுதிமொழி எடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதில் ''**முதியோரை குடும்பத்தில் நல்ல முறையில் அரவணைப்போடு பராமரித்திடுவேன் எனவும், மனோரீதியாகவும், உடல் ரீதியாகவும் காயப்படுத்தும் தகாத வார்த்தைகளை உபயோகிக்க மாட்டேன் எனவும், அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பேன் என்றும் பொது இடங்களான மருத்துவமனை, வங்கி, பேருந்து போன்ற இடங்களில் முதியோருக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கெதிரான கொடுஞ்செயல்கள், வன்முறைகள் எவ்விதத்திலும் இழைக்கப்படுவதனை தடுத்திட பாடுபடுவேன்**'' என உறுதிமொழி எடுக்குமாறு உங்கள் அனைவரையும் உளமாற கேட்டுக்கொள்கிறேன்.

*முதுமையை போற்றுவோம்! முதியோர் நலம் பேணுவோம்!!*

**K. பழனிசாமி**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**